# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 39

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!



# வகுப்புவாரி உரிமையின் முதல் போர்!

**1909**-ஆம் ஆண்டு, நடைமுறைக்கு வந்த மிண்டோ-மார்லி சட்டத்தின்படி, இஸ்லாமியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்களிக்கும் உரிமை போன்று, பார்ப்பனரல்லாத (இந்து) மக்களுக்கும் வழங்க வேண்டும் என்பது நீதிக்கட்சியின் நிலைப்பாடு. அதேபோல் அப்போது காங்கிரசில் இருந்த தந்தை பெரியார், திரு.வி.கல்யாணசுந்தரம், வரதராஜுலு நாயுடு ஆகியோர் சென்னை, மாகாண சங்கத்தில் சேர்ந்து வகுப்புவாரி உரிமைக்காகக் குரல் கொடுத்தனர். எனினும், மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையில், நீதிக்கட்சியின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

தொகுதி, வாக்காளர் முறை உள்ளிட்டவற்றைத் தீர்மானிக்க, 'சவுத்பாரோ குழு' அமைக்கப்பட்டது. அக்குழுவில் பார்ப்பனரல்லாத வகுப்பினரின் வகுப்புரிமையை எதிர்க்கும் சுரேந்திரநாத் பானர்ஜியும், ஸ்ரீனிவாச சாஸ்திரியும் சேர்க்கப் பட்டதால், அக்குழுவின் முன் சாட்சியம் அளிக்கப்போவதில்லை என்று நீதிக்கட்சி முடிவு செய்தது.

மகிஷ்யர்கள் (வங்காளம், அஸ்ஸாம்), மார்வாரிகள் (பீகார், ஒரிசா), அஹோம்கள் (அஸ்ஸாம்), பாம்பேயின் மகர்கள், பார்சிக்கள் உள்ளிட்ட பல சமூகங்கள் தனி வாக்காளர் தொகுதிகள் ஒதுக்கக் கோரினர். இக்கோரிக்கைகளை சவுத்பாரோ குழு ஏற்றுக்கொள்ளவில்லை. பம்பாய், சென்னை மாகாணங்களில் பார்ப்பனரல்லாத அமைப்புகள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரின. பெரும்பான்மைச் சமூகம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இயங்குமானால் அவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெற இயலும் என்பது சவுத்பாரோ குழுவின் நம்பிக்கை.

மத, சமூக அந்தஸ்தின் காரணமாக, பார்ப்பனர்கள் மக்கள்தொகை விகிதத்தை விட கூடுதலான அரசு வேலைகளைப் பிடித்துள்ளனர் என்று பார்ப்பனரல்லாத தலைவர்கள் ஆதாரங்களுடன் கூறியதை ஏற்றுக்கொண்ட சவுத்பாரோ குழு இரண்டு வகையான தீர்வுகளை ஆலோசித்தது. முதலாவதாகப் பெரும்பான்மை பார்ப்பனரல்லாத தலைவர்கள் கோரியபடி, பார்ப்பனரல்லாத மற்ற அனைத்து இந்துக்களையும் உள்ளடக்கிய வகுப்புவாரி வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளை உருவாக்குவது, இரண்டாவது, பல உறுப்பினர் தொகுதிகளை உருவாக்கி, பார்ப்பனரல்லாதவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்குதல்.

## யாருக்கு எவ்வளவு இடங்கள்?

தாழ்த்தப்பட்ட மக்களை நீக்கிவிட்டுக் கணக்கிட்டாலும், சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் பெரும்பான்மையினர் என்பதால், வகுப்புவாரி வாக்காளர் தொகுதிகளை சவுத்பாரோ குழு ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், பார்ப்பனரல்லாதார் வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளை பார்ப்பனர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மீதமிருக்கும் ஒரே வாய்ப்பு பார்ப்பனரல்லாதார் இட ஒதுக்கீட்டுடன் கூடிய பல உறுப்பினர் தொகுதிகள் மட்டுமே. அதேபோல் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களை கவர்னர் நியமித்துக் கொள்ளலாம் என்று சவுத்பாரோ குழு கூறியது.

யார் யாருக்கு எத்தனை இடங்கள் என்பதை இரு தரப்பாரும் பேசி முடிவு செய்துகொள்ளலாம் என்று தீர்மானிக்கப் பட்டதின் அடிப்படையில், கவர்னர் வெலிங்டன் பிரபு முன்னிலையில் பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாத தலைவர்களும் கலந்து பேசினர். அந்நிகழ்வில் சென்னை மாகாண சங்கம், பார்ப்பனர், நீதிக்கட்சி ஆகிய மூன்று தரப்பினரும் கலந்துகொண்டனர்.

'பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு மாவட்டத்திற்கு ஒரு தொகுதி மட்டுமே ஒதுக்கவேண்டும்' என்பது ராமச்சந்திர ராவ் எனும் ஆந்திர பார்ப்பனர் முடிவு. 'மொத்தமுள்ள 63 இடங்களில் 7 இடங்களைப் பார்ப்பனர்களுக்கு ஒதுக்கலாம்' என்பது தியாகராயர் முடிவு. '3 விழுக்காடு இருக்கும் பார்ப்பனர்களுக்கு நான்கு இடங்கள் ஒதுக்கலாம்' என்றார், நீதிக்கட்சியின் கே.வி.ரெட்டி நாயுடு. 'பாதி இடங்களைப் பார்ப்பனரல்லாதவர்களுக்கு ஒதுக்கலாம்' என்ற கவர்னரின் முடிவை தியாகராயர் ஏற்றுக்கொள்ளவில்லை.

மெஸ்டன் பிரபுவை நடுவராகக் கொண்டு பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொள்ள முடிவானது. அதன்படி பார்ப்பனர் தரப்பில் 6 பேர், பார்ப்பனரல்லாதார் தரப்பில் 6 பேர் கலந்து பேசினர். பிட்டி தியாகராயர், ஏ.ராமசாமி முதலியார் உள்ளிட்டோர் பார்ப்பனரல்லாதார் தரப்பில் கலந்துகொண்டு, 42 இடங்கள் வேண்டுமெனக் கோரினர். மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் மட்டுமே பார்ப்பனரல்லாதாருக்குத் தரலாம் என்று பார்ப்பனர்கள் கூறினர். இறுதியில், பார்ப்பனரல்லாதாருக்கு 28 இடங்கள் என்று மெஸ்டன் பிரபு அறிவித்துவிட்டார். அதன்படி 3 நகர்ப்புறத் தொகுதிகளும், 25 கிராமப்புறத் தொகுதிகளும் பார்ப்பனரல்லாதவர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

## ஏற்றுக்கொள்ளாத நீதிக்கட்சி

நீதிக்கட்சியினரால் இதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இருப்பினும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டுவிட்டது என்ற வகையில், நீதிக்கட்சியின் வகுப்புவாரி உரிமைப் போராட்டத்துக்கு கிடைத்த குறிப்பிடத்தகுந்த வெற்றி இது. இந்த வெற்றி, அடுத்து வந்த சென்னை மாகாணத் தேர்தலில் நீதிக்கட்சியினருக்குப் பயன்பட்டது.

மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டத்தின்படி 1920-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னை மாகாண சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சி இத்தேர்தலில் பங்குபெறவில்லை. மொத்தமிருந்த 98 சட்டமன்றத் தொகுதிகளில் நீதிக்கட்சி 63 இடங்களில் வென்றது. 18 நியமன உறுப்பினர்கள் நீதிக்கட்சியின் ஆதரவாளர்கள். ஒட்டு மொத்தமாக 127 உறுப்பினர்கள் இருந்த சட்டமன்றத்தில் நீதிக்கட்சிக்கு 81 இடங்கள் கிடைத்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 65 உறுப்பினர்கள் பார்ப்பனரல்லாதார். பார்ப்பனர்கள் 22 உறுப்பினர்கள். முஸ்லிம்கள் 5. கிறித்துவர்கள் 14, நியமன உறுப்பினர்களாக 5 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இடம்பெற்றனர்.

அதற்கு முந்தைய பத்தாண்டுகளுடன் (1910-1920) ஒப்பிட்டு, 1920-ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி பெற்ற வெற்றியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். 1910 முதல் 1920 வரையிலான 10 ஆண்டுகளில் மெட்ராஸ் சட்டமன்றத்தில் அலுவல்பூர்வ உறுப்பினர்களாகப் பணியாற்றிய ஒன்பது இந்தியர்களில், எட்டு பேர் பார்ப்பனர்கள். 1916-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் நகராட்சிகள், தாலுகா மற்றும் மாவட்ட நிர்வாகத் தொகுதிகளால் நிரப்பப்பட வேண்டிய 9 இடங்களில் 8 இடங்களைப் பார்ப்பனர்களே கைப்பற்றினர். 1916-இல் சென்னை மாநகராட்சி மூலம் சென்னை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் பார்ப்பனர்தான். 1907 - ஆம் ஆண்டு முதல் சென்னை பல்கலைக்கழகத்தால், சென்னை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 உறுப்பினர்களில் ஒருவர் மட்டுமே பார்ப்பனரல்லாதார். மீதமுள்ள 11 உறுப்பினர்கள் பார்ப்பனர்களே.

## தூணைப் புயல் சாய்த்தது

"இந்திய வரலாற்றில் முதன்முறையாக சென்னையின் ஒடுக்கப்பட்ட சாதியினர், உயர் சாதி ஆதிக்கத்திற்கு எதிராகத் தங்கள் உரிமையை நிலைநிறுத்தி, அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர். சமீபத்திய அரசியலமைப்பு மாற்றங்களின் விளைவாக, அரசியல் துறையில் சாதிய ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் தூணைப் புயல் தாக்கியுள்ளது" என இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையின் முக்கியத்துவத்தை 1921-22-இல் வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் இந்திய அரசின் அதிகாரப்பூர்வ மதிப்பாய்வில் குறிப்பிடப்பட்டது.

சட்டமன்றத்தில் நிரம்பிவழிந்த பார்ப்பன ஆதிக்கம் வீழ்த்தப்பட்டு, புதிய திசைவழி பிறந்தது. அன்றிலிருந்து இன்று வரை தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு வகுப்பாரின் ஆதிக்கத்தின் கீழ் இல்லை. எனவே, 1920-ஆம் ஆண்டு தேர்தலில் வகுப்புவாரி உரிமையைப் பொறுத்த வரையில் புதிய வரலாறு எழுதப்பட்டது.

**சமீபத்திய அரசியலமைப்பு மாற்றங்களின் விளைவாக, அரசியல் துறையில் சாதிய ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் தூணைப் புயல் தாக்கியுள்ளது!**

அமைச்சரவை அமைத்திடுமாறு, பெரும்பான்மை பெற்ற நீதிக்கட்சியின் தலைவர் தியாகராயரை கவர்னர் வெல்லிங்டன் பிரபு அழைத்தார். முதல்வர் பதவி ஏற்க மறுத்த தியாகராயர், சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராக்கினார். ராமராய நிங்கார் (பனகல் அரசர்), கே.வி.ரெட்டி நாயுடு ஆகியோரும் 15.12.1920 அன்று முதலமைச்சருடன் புதிய அமைச்சர்களாகப் பதவி ஏற்றுக் கொண்டனர். வகுப்புவாரி உரிமைப் போரில் புதிய பாதை பிறந்தது.

**...குரல் ஒலிக்கும்**

---

## முன்னோடிகளை மறக்காத இளம் தலைவர்!

"முரசொலியில் 'பாசறைப் பக்கம்' என்று ஒரு பகுதி தொடங்குவதாகவும், அந்தப் பக்கத்தில் வெளிவரவுள்ள தொடர்களுக்குப் படம் வரைய வேண்டும் என்றும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் குழுவில் இருந்து தொடர்பு கொண்டனர். நான் அப்போது, வழக்கமாக பத்திரிகைகளுக்குப் படம் வரைவதுபோன்ற வேலையாக இருக்கும் என்றுதான் நினைத்தேன்.

ஆனால், 'திராவிடப் போராளிகள்', 'உடன்பிறப்பே' தொடர்களுக்குப் படங்களை வரைவது இவ்வளவு சவாலாக இருக்கும் என்று நினைக்கவில்லை. அந்தந்த தலைவர்களின் வரலாற்றை வாசிக்கையில், முக்கிய ஆளுமைகள் நம் மத்தியில் வாழ்ந்து, தமிழ் மண்ணை திராவிடச் சிந்தனைக் களமாகவும் பகுத்தறிவுச் சமூகமாகவும் மாற்றியிருப்பதை வியப்போடு அறிந்துகொண்டேன்.

படிக்கும்போது உத்வேகம் கிடைத்தாலும் அவர்களில் சிலரை ஓவியமாக வரைவது கடினமான பணியாக இருந்தது. ஏனென்றால் கையில் கிடைத்த அவர்களின் சில புகைப்படங்கள் உருவமற்ற உருவமாக பல செல்லரித்தவையாக இருந்தன. சில படங்கள் 'லித்தோ பிரிண்டில்' வெளிவந்த மிகச் சிறிய படங்கள், கறுப்பு வெள்ளைப் படங்களை வண்ணமாக மாற்ற அந்நாளைய சினிமா போஸ்டர் பாணியில் செய்யப்பட்ட வண்ணங்களால் உண்மையான முகம் சற்றே மாறுதலடைந்த படங்கள், குழுப்படங்களுக்குள் மிகச் சிறியதாக ஒளிந்திருக்கும் உருவத்தை எடுத்து அவர்களின் உண்மையான உருவத்தை ஓவியத்தின் வழியாக வெளிக்கொணர்தல் என சுவாரசியங்களுடனும் சவால்களுடனும் பலரை மீட்டுருவாக்கம் செய்ததில் மனம் பெரும் நிறைவுகொண்டது.

கழகத் தலைவர்களையும், தோழமைகளையும், கழகத்தின் உயிர்த் தொண்டர்களையும் பழமையும் புதுமையும் கலந்த ஒரு புதிய பாணியில் ஓவியமாக்கும் இந்த புதிய பணி முதலில் ஆர்வமூட்டுவதாகவும், பின்னர் எனது முக்கியக் கடமையாகவும் மாறிப்போனது. திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மிகப் பெரிய இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க மிக முக்கியமான ஆவணப்படுத்தல் பணியில் ஈடுபடுகிறோம் என்கிற எண்ணம் தரும் பெரும் உவகையோடு தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

அந்த அங்கீகாரத்தையும், வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கிய ஆவணப்படுத்தலையும், மன நிறைவினையும் உருவாக்கித் தந்தவர், தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள். முன்னோடிகளை மறக்காத இளம் தலைவராக கொள்கைகளைக் கடத்தும் அவரது பணி என்றும் நினைவுகூரப்படும். உவகைப் பணி தொடரட்டும்".

–ஓவியர் ரவி பேலட்

---

## ஃப்ளாஷ்பேக்

### தளபதி தந்த ஊக்கம்!



2014-ஆம் ஆண்டு, மக்களவைத் தேர்தல் நேரம் சமூக வலைதளங்களில் சிறப்பாகக் கழகப் பணியாற்றிவரும் தன்னார்வலர்களைத் தளபதி அவர்கள் சந்திக்க விரும்பியபோது, அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 200 பேர் வருகை தந்து, மார்ச் 12-ஆம் தேதி, தளபதி அவர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டோம். "நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரம் தொடங்குவதற்கு முன், உங்களையெல்லாம் சந்திக்க விரும்பினேன்" எனக் கூறி எங்களை ஊக்கப்படுத்தினார். அனைவரும் தளபதி அவர்களுடன் தனித்தனியே புகைப்படம் எடுத்துக்கொண்டோம்.



எம்.சிவா

**– எம்.சிவா, கழகச் சமூக வலைதளத் தன்னார்வலர், கோயம்புத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### கடல் போல மக்கள் வெள்ளம்!


1975-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், கோவை மாநில மாநாட்டில், 10 லட்சம் பேருக்கும் மேல் திரண்டனர். மாநாட்டுப் பந்தலுக்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள்வெள்ளம் திரண்டிருந்தது. கோவை, சிதம்பரம் பூங்காவிலிருந்து அண்ணா சிலை வரையிலும், இன்னொருபுறம் மேம்பாலம் வரையிலும் நின்றவாறும், அமர்ந்தவாறும் மாநாட்டுத் தீர்மான விளக்கவுரைகளையும், சொற்பொழிவுகளையும் கழகத்தினர் கேட்டனர். மாநாட்டில், 'மக்களாட்சியின் மாண்பு கருதி, குடியரசுத் தலைவர் ஆட்சியை நுழைக்க வேண்டாம்' என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முக்கியமானது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

672

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.